INTERNATIONAL FEDERATION OF TAMILS
18, Rue de Paquis, 1201 Geneva, Switzerland
E-Mail : ift@bluewin.ch

*Ref: 26/JU08/ta/03*

ஜெனீவா
26 யூன் 2008

ஊடகச் செய்திக்குறிப்பு

**புலத்துத் தமிழ் சமூகத்தினை குற்றவாளிகளாக்குவதை விட்டுவிட்டு தொடர்பாடல்களை மேற்கொள்ளுங்கள்!**

கனேடிய தமிழ்ப்புலத்தவர்களின் குரலை நசுக்குவதற்காக உலகத்தமிழர் இயக்கத்தினை பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்களை துஸ்பிரயோகம் செய்து பயங்கரவாதிகளாகப் பட்டியலிட்டமை அதிருப்தியினை ஏற்படுத்துகின்றது என அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளில் இத்தகைய குற்றச்சாட்டுகளின் கீழ் இடம்பெற்ற கைதுகளினைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்த நாடுகளால் பயங்கரவாதிகளாகப் பட்டியலிடப்பட்ட புலிகள் இயக்கத்திற்கான புலத்துத்தமிழர்களின் ஆதரவே தற்போதை நடவடிக்கைகான தெளிவான காரணமாகவுள்ளது. 1977ல் சுயாதீனமான தேர்தல்களின் போது வழங்கப்பட்ட சுதந்திரத் தமிழீழத்திற்கான சனநாயகபூர்வ அங்கீகாரத்தின் மீது புலிகள் இயக்கம் வைத்துள்ள உறுதியான ஈடுபாட்டினாலேயே புலத்தமிழ் மக்கள் புலிகள் இயக்கத்தினை ஆதரவளிக்கின்றனர்.

அரசு ஆதரவுபெற்ற இனஒழிப்பு நடவடிக்கைகள், மற்றும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் போன்ற சிங்கள அரசின் ஒடுக்குமுறைகளினால் பல்லாயிரம் மக்கள் அந்தத்தீவினை விட்டு அகதிகளாக புலம்பெயர்ந்தனர் என்பதை தமிழ்சமூகம் நினைவில் வைத்துள்ளது.

அப்போது தொடக்கம் இந்தக் கொடிய ஒடுக்குமுறையிலிருந்த தம்மை புலிகளே பாதுகாக்கின்றனர் என்பதையும், புலிகளே தமிழ் மக்கள் சார்பில் பேச்சுக்களிலும், போர்நிறுத்தங்களிலும் ஈடுபடுகின்றனர் என்பதையும் தமிழ் சமூகம் நினைவில் வைத்துள்ளது. புலிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு அரசினை உருவாக்கியுள்ளனப் என்பதையும் நினைவில் கொண்டுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களால் விரட்டப்பட்ட போது தமிழ் மக்களை பலவருடங்களாக அகதிகளாக ஏற்றுக்கொண்ட மேற்குலக அரசுகளே இப்போது அரசியல் நிலைப்பாடுகளை சொல்வதற்காக தண்டிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தினை புலத்தமிழர் மத்தியில் ஏற்படுத்துவது துன்பகரமானதொரு நிழ்வாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் இனமோதுகையை தணிப்பதற்கு எதுவித உதவிகளையும் செய்யமுடியாதது மட்டுமல்ல எதிர்விளைவுகளை தரக்கூடியதுமாகும்.

புலிகளை ஆதரிப்பதற்காக தமிழ் சமூகத்தினை கிரிமினல்களாக்குவதை விட்டுவிட்டு பல்லாயிரம் தமிழர்கள் விரட்டி - பல்லாயிரம் மக்களை ஆயுதம் ஏந்தவைத்த இனமோதுகையின் மூலகாரணங்களுக்கான பதிலை இந்த அரசுகள் தேடல் வேண்டும்.

புலத்துத்தமிழ் சமூகத்துடன் தொடர்பாடல்களை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச சமூகம் இலங்கைத்தீவில் நீடித்துநிற்கும் சமாதானத்தினை கட்டியெழுப்ப உதவிடலாம்.

தமிழீழ விடுதலைப் போரினை ஆதரிப்பதற்கான புலத்துத் தமிழ்மக்களின் நியாயங்களைப் புரிந்து கொள்ளவும், இலங்கைத்தீவில் தமிழ் - சிங்கள மக்கள் இயைந்து வாழ்வதற்கான கட்டமைப்புக்கள் பற்றிய புலத்துத் தமிழ் மக்களின் கருத்துக்களைக் கரிசனையில் எடுப்பதற்கும், தமிழர் தேசத்தின் பொருளாதார வளர்ச்சி, சனநாயகமுன்னெடுப்பு விடயங்களிற்குமான புலத்தின் ஆற்றலை வளர்தெடுப்பதற்கும் சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளித்திட அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தயாராகவேயுள்ளது.
(முடிவு)

தொடர்புகளுக்கு: ift@bluewin.ch